# சாஸ்தாவின் நந்தவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்தாவின் நந்தவனம்

இலங்கை நாட்டில் இன்றைய வாழ்க்கையில் பல சிக்கல்களில் மாட்டிக்கொண்டு தினமும் அல்லல்பட்டு வருகிறோம். இதிலிருந்து விடுபட மனஅமைதி, தியானம், இறைபக்தி மிக அவசியம். நாம் வருடத்திற்கு ஒரு முறையாவது, சில நாட்களாவது தூய மனத்துடனும் மெய்யான பக்தியுடனும் நல்ல சிந்தையுடனும் மனதை கட்டுப்படுத்தி விரதங்கள் இருந்து சபரிமலை செல்லும் யாத்திரை மிகப் புனிதமானது! அற்புதமானது!

சபரிமலை யாத்திரையில் உயர்ந்தவர், தாழ்ந்தவர், படித்தவர், படிக்காதவர், ஏழை, பணக்காரர், ஜாதி, மதம், மொழி என்ற வித்தியாசம் இல்லை. எல்லோரும் அன்போடும், பண்போடும் யாத்திரையில் கலந்து கொள்கிறார்கள். சாமியே சரணம் ஐயப்பா என்ற தாரக மந்திரம் மலை முழுவதும் எதிரொலிக்கின்றது. கலியுகவரதன் ஐயப்பன் கண்கண்ட தெய்வம். பல அதிசயங்களையும், அற்புதங்களையும் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்.

ஸ்ரீ ஐயப்பன் பக்தி மாலையில் அடங்கியுள்ள வழிபாட்டு முறைகளும், பொன்மொழிகளும் பெரியவர்களாலும், ஞானிகளாலும் ஆராய்ந்து சொல்லப்பட்டவைகள். நாம் ஐயப்பன் மீதுள்ள பக்தியாலும், அன்பாலும், நன்றி உணர்வினாலும் இதை தொகுத்து அளிக்கின்றோம்.

**துன்னாலை, கரவெட்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய விரத முறைகள்

ஐயப்ப பக்தர்கள் முக்கியமாக அனுஷ்டிக்க வேண்டிய விரதம் பிரம்மச்சர்யம். காலை மாலை குளித்து படம் அல்லது ஆலயத்தில் சுவாமி முன் தவறாமல் சரணம் கூப்பிடுதல், சுத்தமான உணவையே உட்கொள்ளுதல், எப்பொழுதும் ஐயப்பன் நினைவாகவே இருத்தல், ஸத்வ குணத்தையே வளர்த்தல் இவையாகும். மற்றவர்கள் செய்யும் பூஜைகளில் கலந்துகொள்வதும் மிக நலனைத் தரும். மற்றவர்களிடம் உரையாடத் தொடங்கமுன் சுவாமி சரணம் என்று கூறிப் பேசுதல் வேண்டும். எல்லோரிடமும் எப்பொழுதும் மரியாதையாகவும், அன்புடனும் நடந்துகொள்ளவேண்டும்.

## சபரிமலை யாத்திரை

01. சபரிமலை பெருமானைக் காண ஆர்வங்கொண்டு செல்லும் பக்தர்கள் பல நியதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். முதல் தடவையாகச் சபரிமலைக்குச் செல்லும் ஐயப்ப பக்தனுக்கு கன்னி ஐயப்பன் என்று பெயர்.

02. நல்ல நாளில் சனிக்கிழமை அல்லது உத்திர நட்சத்திரத்தில் பெரிய ஐயப்பனை (பல தடவை கோவிலுக்கு சென்றவரை) அணுகிப் பணிந்து அவரது ஆசியோடு ருத்திராட்ச மாலையோ அல்லது துளசி மாலையோ அணிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பின் ஒரு மண்டலம் அதாவது நாற்பத்தொரு நாள் விரதம் அனுஷ்டிக்க வேண்டும். எப்பொழுதும் ஐயப்பா சரணம் சுவாமியே சரணம் என்று மனம் உருகிச் சொல்லி வணங்க வேண்டும். சத்வ உணவு உட்கொள்ள வேண்டும். பிறருடன் பேசும் போதும், பழகும் போதும் உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

04. சதா பேச்சிலும் சிந்தையிலும் ஐயப்பன் திருநாமம் மட்டும்தான் இருக்கவேண்டும்.

05. கூடுமானவரை கறுப்பு, காவி, நீலம், பச்சை ஆடையே அணியவேண்டும்.

06. நாம் தியானம், ஜபம், தேவ பூஜை, பஜனை, அன்னதானம் இவைகளில் பங்கெடுக்க வேண்டும்.

07. சாஸ்தா பூஜை அன்னதானம் செய்து யாத்திரை புறப்பட வேண்டும்.

08. குரு சொற்படி இருமுடிக்கட்டுக்குத் தேவையான பொருட்களை இரண்டு அறை கொண்ட நீளமான பை ஒன்று செய்து அதில் பூஜைப் பொருட்கள், கற்பூரம், அபிஷேக நைவேத்ய பொருட்கள், காணிக்கைப் பணம் இவைகளை முன்கட்டிலும், யாத்ரா காலத்திற்குத் தேவையான உணவுப் பண்டங்களைப் பின்கட்டிலும் வைத்துக்கொண்டு பையைத் தலையில் எடுத்துச் செல்ல வேண்டும். இதுதான் இருமுடி எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. நைவேத்தியத்திற்குப் பசுவின் நெய்யை உருக்கி ஒரு தேங்காயின் கண்ணைத் திறந்து இளநீரை எடுத்துவிட்டு அதற்குள் காய்ச்சிய நெய்யை நிரப்பிக் கார்க்கினால் இறுக மூடவேண்டும்.

10. பாயோ கம்பளியோ எடுத்துக்கொள்ளலாம்.

11. இருமுடி சுமந்து வீட்டைவிட்டுப் புறப்படும்போது எவரிடமும் விடைபெறுவது கூடாது. திரும்பிக்கூடப் பார்ப்பது கூடாது.

12. கோட்டயத்திற்கு பதினெட்டு மைல் தூரத்திலுள்ள பந்தள ராஜாவின் அரண்மனையில் சுவாமியின் திரு ஆபரணங்களைக் காணலாம். சபரிமலை செல்கின்ற பக்தர்கள் பந்தள ராஜாவிடம் பிரசாதமும் மலையேற அனுமதியும் பெறுவர்.

## சபரிமலைக்குச் செல்லும் பொழுது கடந்து செல்லும் முக்கியமான இடங்கள்

01. **எருமேலி** : கொள்ளைக்காரன் வாபரைத் திருத்தி சமாதானப்படுத்தி சாஸ்தாவாக ஐயன் குடிகொண்டுள்ள இடம். இங்கு எருமேலி பேட்டை சாஸ்தா முன் பக்தர்கள் கரும்புள்ளி, செம்புள்ளி, கலர் வர்ணங்களை முகத்திலும், உடலிலும் பூசி ஆடுவார்கள். இது பேட்டை துள்ளல் எனப்படும். பின்பு பள்ளிவாசலுக்குச் சென்று வாபரைத் தொழுது பின்பு மணிமாலா ஆற்றில் குளித்துவிட்டு பெருவழிப்பாதையில் பயணத்தை ஆரம்பிக்கும் இடம் இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. பேரூர் தோடு** : இங்குள்ள மீன்களுக்குப் பொரி வாங்கிப்போட்டு வழிபட்டு மகிழ்வர்.

**03. காளைகட்டி** : இங்குள்ள சிவன் தன்னுடைய வாகனமாகிய காளையைக் கட்டிவிட்ட மகன் ஐயப்பன் மகிஷியை வதம் செய்வதைக் கண்ட இடம்.

**04. அழுதா நதி** : இந்த நதியில் குளித்துவிட்டு ஆற்றிலுள்ள ஒரு கல்லை எடுத்து கல்லிடும் குன்று செல்ல வேண்டும்.

**05. கல்லிடுங் குன்று** : மகிஷியின் உடலின் ஒரு பாகம் இங்கு போய் விழுந்து மணிகண்டன் அதை ஒரு கல்லால் மூடியதாகவும், அதன்படியே நாமும் அழுதை ஆற்றில் எடுத்த கல்லினை இங்கு போட்டு வணங்குவோம்.

**06. உடும்பாறை கோட்டை** : உடும்புகள் அதிகமாக உள்ள இடம். எருமேலியில் இருந்து பம்பா வரையுள்ள பெரும் வனப்பகுதியில் மிருகங்கள் வழி ஒதுங்கி நிற்பதோடு எந்தத் தீங்கும் ஏற்படுத்துவதில்லை என்பதுதான் அதிசயம்.

**07. இஞ்சிப்பாறை கோட்டை** : இங்கு அதிர்வேட்டுப்பிறியன் என்று சொல்லப்படும் ஐயனுக்கு பக்தர்கள் வெடி வழிபாடு செய்து மகிழ்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. முக்குழி** : புலிகள் நிறைந்துள்ள வனப்பகுதி. இங்கு இரவுவேளை தங்குவார்கள்.

**09. இலவன் தோடு** : இங்கும் இரவுவேளை தங்குவார்கள். இளைப்பாறியும் செல்லலாம்.

**10. புதுச்சேரி நதி** : உணவு தயாரிப்பாளர்கள் தயாரித்து உண்பார்கள்.

**11. கரிமலை** : கடினமான ஏற்றம். சரணம் சொல்லியபடியே ஏறினால் எளிதாக இருக்கும். இது கரியானைகள் உள்ள பகுதி. யானைக்கு விருப்பமான கூக் இலைகள் இருப்பதால் இங்கு யானைகள் அதிகமாக உள்ளது.

**12. கரிமலை உச்சி** : இந்த உச்சியை அடைந்துவிட்டால் நாம் பம்பையை அடைந்துவிட்டோம் என்ற உணர்வு தோன்றும்.

**13. கரிமலை இறக்கம்** : இந்த இறக்கத்தில் இறங்கும் பொழுது சற்றுக் கவனமாக இறங்க வேண்டும். முடியாதவர்கள் தடி ஒன்றை வைத்துக்கொண்டால் மிக எளிதாக இருக்கும்.

**14. சிறியானை வட்டம்** : பெரிய வனப் பகுதி. இங்கும் யானைகள் நிறைய உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**15. பெரியானை வட்டம்** : இங்கு பல முனிவர்கள் தவம் செய்து முக்தி அடைந்த இடம். பெரும் வனப்பகுதியான இங்குதான் பந்தள அரண்மனையில் இருந்து கொண்டுவரப்படும் திரு ஆபரணப்பெட்டியை வைக்கும் மணி மண்டபம் உள்ளது. மகர சங்கிராந்தியன்று மதியம் பந்தள மகாராஜா மற்றும் ஆபரணப் பெட்டி தூக்குபவர்கள் இளைப்பாறி அன்னதானம் உண்ணுவார்கள். இந்த அன்னதானத்தை பரம்பரையாக மதுரை ஸ்ரீ சடகோபராமானுஜ ஐயப்ப பக்த சபையினரால் வழங்கப்பட்டு வருகின்றது.

**16. பம்பா நதி** : இந்த நதியில் தான் ஸ்ரீராமர் வனவாசம் சென்றிருந்த போது அயோத்தியில் இறந்த தந்தைக்காக தெர்பனம் செய்தார். அப்படியான புனித நதியில் நீராடிச் செய்த பாவங்கள் அனைத்தையும் ஆற்றில் கழுவியபின் புண்ணிய பலனுடன் பம்பா கணபதியை வணங்கிப் பின் யாத்திரிகள் சபரிமலை ஏற ஆரம்பிக்கின்றனர்.

**17. நீலி மலை** : இந்த மலையில் ஏறும்பொழுது கஷ்டப்பட்டு ஏறுகின்றோம். உண்மையாக விரதம் இருந்தவர்களுக்கு இந்த ஏற்றம் எளிதாக இருக்கும்.

**18. அப்பாச்சி மேடு** : இங்குள்ள மேட்டில் இருந்து காட்டுப் பகுதிக்கு துஷ்டதேவதைகள் மற்றும் விலங்குகள் அண்டாமல் இருக்க அச்சுவெல்லம் பொறி உருண்டைகளை தூக்கி எறிவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19. சபரி பீடம்** : சபரி என்ற பெண் தவம் செய்து ஸ்ரீராமரால் மோட்சம் பெற்ற இடம். அவளுடைய நினைவாகவே இந்த மலைக்கு சபரிமலை என்று பெயர். இங்குள்ள பீடத்திற்கு பக்தர்கள் தேங்காய் உடைத்துச் செல்வார்கள்.

**20. சரங்குத்தி** : மணிகண்டன் தன்னுடைய அம்பு, வில் போன்ற ஆயுதங்களை விட்டுச் சென்ற இடம். இங்கு முதல் முறையாக வரும் கன்னிச்சாமி சரம் என்று சொல்லப்படுகின்ற மரத்தினால் செய்யப்பட்ட கத்தி அம்பை சரங்குத்தியில் செருகிவிட்டுச் செல்வார்கள்.

**21. சன்னிதானம்** : இங்குதான் பக்தர்களின் இலக்கான பதினெட்டுப் படிகளின் மேலுள்ள தங்கத் தகட்டினாலான ஸ்ரீ ஐயப்பன் சன்னிதானம், மற்றும் மஞ்சமாதா கோயில் உள்ளன.

## திருவாபரண பெட்டி

கலியுகத்தில் மகரஜோதி வடிவில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் ஸ்ரீ சபரிகிரி தர்மசாஸ்தாவின் மகத்துவம் வாய்ந்த திருவாபரணம் ஒவ்வொரு வருடமும் அவர் வளர்ந்த இடமான பந்தளத்தில் இருந்து அன்று தொடக்கம் அவருடைய இன்றைய வழி வம்ச பரம்பரை மூலமாக பந்தள அரண்மனையில் இருந்து இரண்டு கருடன் பாதுகாப்பு வழங்க பாத யாத்திரையாக மகரசங்கிராந்தியன்று சபரிமலை சன்னிதானத்திற்கு கொண்டுவரப்படுகின்றது. உடலில் உள்ள ஐயப்ப பக்தர்கள் பல ஆபரணங்கள் வழங்கியும் தெய்வத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருபையாக ஐயப்பனுக்கு அணியப்படுவது பந்தளத்தில் உள்ள திருவாபரணமே ஆகும். இப்படிப்பட்ட காலத்தில் அழியா காவியமாக திருவாபரண பெட்டியின் மகத்துவத்தில் குறிப்பிட வேண்டிய மற்றொரு விடயம் யாதெனில் மதுரையில் உள்ள ஸ்ரீ சடகோபராமானுஜ ஐயப்ப பக்தருக்கு திருவனந்தபுரம் தானுப்பிள்ளை அவர்கள் திருவாக்கின் மூலம் பெரியானை வட்டத்தில் திருவாபரணபெட்டிக்கு அன்னதானம் இடும் பெரும் பாக்கியம் உள்ளதெனவும் பச்சை வேட்டி அணிந்து தலையில் பச்சைத் துணி இடதுபக்க முடிச்சாக கட்டி நிற்கும்படியும் கனவில் திருவாக்கு உதயத்தில் உந்தப்பட்டு, அந்த வாக்கை பக்தி சிரத்தையுடன் மனதில் கொண்டு தனது ஒன்பதாவது மலையில் (1953ஆம் ஆண்டு) முயற்சியில் ஈடுபட்டார். பெரியானை தாவளத்தில் அன்னதானம் ஆயத்தமாக இருந்தபோதும் அன்னதானம் வழங்கும் வாய்ப்பு கிட்டியதாகத் தெரியவில்லை. இருந்தும் இறைவாக்கு பொய்யாகாது எனவும் அன்னதானப் பிரபு நிச்சயம் கைகொடுப்பார் என்ற உறுதியுடன், திருவாபணர பெட்டி தூக்கும் கோஷ்டியவரையும் ராஜ பரம்பரையினரையும் எதிர்கொண்டு அழைத்தபோது, திரு சடகோபராமானுஜ குருநாதர் அன்னதானம் இடும் பெரும் பாக்கியம் ஏற்றுக்கொள்ளும்படியான திருவாக்கு உத்தரவாயிற்று. அன்றுமுதல் இன்று வரை மதுரை ஸ்ரீ சடகோபராமானுஜ ஐயப்ப பக்த சபையினரால் இது நடைபெற்று வருகின்றது. இதில் எமது இலங்கை, யாழ்ப்பாணம், தாவடி பதினெட்டாம்படி குருசாமி அ. இந்துதாசன் குரு அவர்களது பதினெட்டாம் வருட மகரஜோதி விழாவில் ஐயனுக்கொரு காணிக்கையாக யாழ் பக்தர்கள் இணைந்து பதின்னான்கு பவுண் எடை கொண்ட தங்கக் கிரீடம் ஒன்றை 2001ஆம் ஆண்டு பந்தள மன்னர் பரம்பரையினராகிய திருவாபரணப் பெட்டிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரித்துடையவர்கள் எனப்படுபவர்களிடம் கையளித்து, அந்தத் தங்கமுடி ஏழைப்பங்காளன் ஐயப்பனுக்கு ஸ்ரீ சடகோபராமனுஜ பக்த சபையின் யாழ்ப்பாண பிரிவின் பதினெட்டாம் படி குருசாமி அ. இந்துதாசனும், ஐயப்ப பக்தருமாக திருவாபரண பெட்டியில் சேர்த்ததை கண்டு இன்றும் அதை எண்ணி காண ஆயிரம் கண் வேண்டும் என யாழப்பாண மற்றும் இலங்கை வாழ் சகல ஐயப்ப பக்தர்களுக்கும் மனம் பூரிப்படைந்ததுடன், யாருக்குமே கிடைக்காத இந்தப் பாக்கியப்பேறு இந்த பதினெட்டாம் படி குருசாமி வழி பக்தர்களுக்கு கிடைத்தது. ஐயன் நீக்கமற நினைத்த இடமெங்கும் எம்மில் கலந்திருப்பதற்கு சான்று என்றே கூறிவிடலாம்.

ஓம்

ஸ்வாமியே சரணம் ஐயப்பா

## மாலை அணியும் முறைகள்

சபரிமலை தரிசனத்திற்குச் செல்லும் பக்தர்கள் ஒரு மண்டலம் முன்னதாக, அதாவது கார்த்திகை மாதம் முதல் தேதியே முத்திரை மாலையான ருத்ராட்சம், துளசிமணி இவைகளில் ஒன்றைக் குருநாதர் மூலம் தெய்வ சந்நிதியிலோ அல்லது வீட்டிலோ பூஜை செய்து அணிந்துகொள்ளலாம். மாலை அணியும் முன் தாய், தந்தையரை வணங்கி மாலை அணிந்துகொள்ள வேண்டும். மலை சென்று வந்தவர்கள் குருவாகக் கிடைக்காவிட்டால் ஆலயம் சென்று கடவுள் பாதத்தில் மாலையை வைத்து அர்ச்சகரிடம் தக்ஷிணை கொடுத்து அர்ச்சனை செய்து தாய், தந்தையரை வணங்கி அர்ச்சகரிடமிருந்து மாலையை வாங்கி ஐயப்பனையே குருவாக நினைத்தும் மாலையைத் தரித்துக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை அணிந்துகொள்ளும் போதுள்ள மந்திரம்

ஞான முத்ராம் சாஸ்த்ரு முத்ராம் குரு முத்ராம் நமாம்யஹம்
வனமுத்ராம் சுத்தமுத்ராம் ருத்ரமுத்ராம் நமாம்யஹம்
சாந்த முத்ராம் சாஸ்த்ர முத்ராம் விரத முத்ராம் நமாம்யஹம்
சபரியாச்ரமஸத்யேன் முத்ராம் பாது ஸதரபிதே
குரு தக்ஷிணயா பூவர்கம் தஸ்யாணுக்ரஹகாரினே
சரணாகத முத்ராக்யம் தவம் முத்ராம் தாரயாம்யஹம்
சின் முத்ராம் கேசரீ முத்ராம் பத்ர முத்ராம் நமாயஹம்
சபர்யாசல முத்ராயை நமஸ்துப்யம் நமோநம

# மாலை கழற்றுவதற்கான மந்திரம்

அபூர்வ மசலா ரோஹி - திவ்யதர்சன காரன
சாஸ்தரு முத்ராம் யஹதேவ - தேஹிமேவிரத மோசனம்

# கற்பூர தீபம் காட்டும் பொழுது ஜெபிக்க வேண்டிய மந்திரம்

தீப மங்கள ஜோதி நமோ நமோ தூய சபரிகிரிஷா நமோ நமோ
பூரனை புஷ்களை நாதா நமோ நமோ அருள் தாராய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன் 108 சரணக் கோவை

01. ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா;
02. ஓம் காந்தமலை ஜோதியே சரணம் ஐயப்பா;
03. ஓம் ஹரிஹர சுதனே சரணம் ஐயப்பா;
04. ஓம் அன்னதான பிரபுவே சரணம் ஐயப்பா;
05. ஓம் ஆறுமுகன் சோதரனே சரணம் ஐயப்பா;
06. ஓம் ஆபத்தில் காப்போனே சரணம் ஐயப்பா;
07. ஓம் இன்தமிழ்ச் சுவையே சரணம் ஐயப்பா;
08. ஓம் இச்சை தவிர்ப்பவனே சரணம் ஐயப்பா;
09. ஓம் ஈசனின் திருமகனே சரணம் ஐயப்பா;
10. ஓம் ஈடில்லாத் தெய்வமே சரணம் ஐயப்பா;
11. ஓம் உண்மைப் பரம் பொருளே சரணம் ஐயப்பா;
12. ஓம் உலகாளும் காவலனே சரணம் ஐயப்பா;
13. ஓம் ஊமைக்கருள் புரிந்தவனே சரணம் ஐயப்பா;
14. ஓம் ஊழ்வினை அழிப்பவனே சரணம் ஐயப்பா;
15. ஓம் எளியோர்க்கு அருள்பவனே சரணம் ஐயப்பா;
16. ஓம் எங்கள் குலதெய்வமே சரணம் ஐயப்பா;
17. ஓம் ஏழைப் பங்காளனே சரணம் ஐயப்பா;
18. ஓம் ஏகாந்த மூர்த்தியே சரணம் ஐயப்பா;
19. ஓம் ஐங்கரன் தம்பியே சரணம் ஐயப்பா;
20. ஓம் ஐயமெல்லாம் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா;
21. ஓம் ஒப்பில்லாத் திருவிளக்கே சரணம் ஐயப்பா;
22. ஓம் ஒளிரும் திருவிளக்கே சரணம் ஐயப்பா;
23. ஓம் ஓங்காரப் பரம்பொருளே சரணம் ஐயப்பா;
24. ஓம் ஓதும் மறைபொருளே சரணம் ஐயப்பா;
25. ஓம் ஔடதங்கள் அருள்பவனே சரணம் ஐயப்பா;
26. ஓம் சௌபாக்கியம் அளிப்பவனே சரணம் ஐயப்பா;
27. ஓம் கலியுக வரதனே சரணம் ஐயப்பா;
28. ஓம் சபரிமலை சாஸ்தாவே சரணம் ஐயப்பா;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. ஓம் சிவன் மால் திருமகனே சரணம் ஐயப்பா;
30. ஓம் சிவவைணவ ஐக்கியமே சரணம் ஐயப்பா;
31. ஓம் அச்சங்கோவில் அரசே சரணம் ஐயப்பா;
32. ஓம் ஆரியங்காவு ஐயாவே சரணம் ஐயப்பா;
33. ஓம் குளத்தப் புழைப் பாலனே சரணம் ஐயப்பா;
34. ஓம் பொன்னம்பல வாசனே சரணம் ஐயப்பா;
35. ஓம் வில்லாதி வீரனே சரணம் ஐயப்பா;
36. ஓம் வீரமணி கண்டனே சரணம் ஐயப்பா;
37. ஓம் உத்திரத்தில் உதித்தவனே சரணம் ஐயப்பா;
38. ஓம் உத்தமனே சத்தியனே சரணம் ஐயப்பா;
39. ஓம் பம்பையிலே பிறந்தவனே சரணம் ஐயப்பா;
40. ஓம் பந்தள மாமணியே சரணம் ஐயப்பா;
41. ஓம் சகலகலை வல்லோனே சரணம் ஐயப்பா;
42. ஓம் சாந்த நிறை மெய்ப்பொருளே சரணம் ஐயப்பா;
43. ஓம் குருமகனின் குறைதீர்த்தவனே சரணம் ஐயப்பா;
44. ஓம் குருதட்சணை அளித்தவனே சரணம் ஐயப்பா;
45. ஓம் புலிப்பாலைக் கொணர்ந்தவனே சரணம் ஐயப்பா;
46. ஓம் வன்புலியின் வாகனனே சரணம் ஐயப்பா;
47. ஓம் தாயின் நோய் தீர்த்தவனே சரணம் ஐயப்பா;
48. ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா;
49. ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா;
50. ஓம் துளசிமணி மார்பனே சரணம் ஐயப்பா;
51. ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே சரணம் ஐயப்பா;
52. ஓம் இருமுடிப் பிரியனே சரணம் ஐயப்பா;
53. ஓம் எருமேலி தர்ம சாஸ்தாவே சரணம் ஐயப்பா;
54. ஓம் நித்திய பிரமச்சாரியே சரணம் ஐயப்பா;
55. ஓம் நீலவஸ்திர தாரியே சரணம் ஐயப்பா;
56. ஓம் பேட்டை துள்ளும் பேரழகே சரணம் ஐயப்பா;
57. ஓம் பெரும் ஆணவத்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா;
58. ஓம் சாஸ்தாவின் நந்தவனமே சரணம் ஐயப்பா;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. ஓம் சாந்திதரும் பேரழகே சரணம் ஐயப்பா;
60. ஓம் பேருத்தோடு தரிசனமே சரணம் ஐயப்பா;
61. ஓம் பேதமையை ஒளிப்பவனே சரணம் ஐயப்பா;
62. ஓம் காளை கட்டி நிலையமே சரணம் ஐயப்பா;
63. ஓம் அதிர்வேட்டப் பிரியனே சரணம் ஐயப்பா;
64. ஓம் அழுதமலை ஏற்றமே சரணம் ஐயப்பா;
65. ஓம் ஆனந்தமிகு பஜனைப் பிரியனே சரணம் ஐயப்பா;
66. ஓம் கல்லிடும் குன்றே சரணம் ஐயப்பா;
67. ஓம் உடும்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா;
68. ஓம் இஞ்சிப்பாறை கோட்டையே சரணம் ஐயப்பா;
69. ஓம் கரியிலந் தோடே சரணம் ஐயப்பா;
70. ஓம் கரிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா;
71. ஓம் கரிமலை இறக்கமே சரணம் ஐயப்பா;
72. ஓம் பெரியானை வட்டமே சரணம் ஐயப்பா;
73. ஓம் சிறியானை வட்டமே சரணம் ஐயப்பா;
74. ஓம் பம்பா நதி தீர்த்தமே சரணம் ஐயப்பா;
75. ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே சரணம் ஐயப்பா;
76. ஓம் திரவேணி சங்கமமே சரணம் ஐயப்பா;
77. ஓம் ஸ்ரீ ராமர் பாதமே சரணம் ஐயப்பா;
78. ஓம் சக்தி பூஜை கொண்டவனே சரணம் ஐயப்பா;
79. ஓம் சபரிக்கு அருள் புரிந்தவனே சரணம் ஐயப்பா;
80. ஓம் தீப ஜோதி தரு ஒளியே சரணம் ஐயப்பா;
81. ஓம் தீராத நோய் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா;
82. ஓம் பம்பா விளக்கே சரணம் ஐயப்பா;
83. ஓம் பழவினைகள் ஒளிப்பவனே சரணம் ஐயப்பா;
84. ஓம் தென்புலத்தர் வழிபாடே சரணம் ஐயப்பா;
85. ஓம் திருப்பம்பையின் புண்ணியமே சரணம் ஐயப்பா;
86. ஓம் நீலி மலை ஏற்றமே சரணம் ஐயப்பா;
87. ஓம் நிறைவுள்ளம் தருபவனே சரணம் ஐயப்பா;
88. ஓம் அப்பாச்சி மேடே சரணம் ஐயப்பா;
89. ஓம் இப்பாச்சி குழியே சரணம் ஐயப்பா;
90. ஓம் சபரி பீடமே சரணம் ஐயப்பா;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. ஓம் சரங்குத்தி ஆலே சரணம் ஐயப்பா;
92. ஓம் உரல்குழி தீர்த்தமே சரணம் ஐயப்பா;
93. ஓம் கருப்பன்ன சாமியே சரணம் ஐயப்பா;
94. ஓம் கடுத்த சாமியே சரணம் ஐயப்பா;
95. ஓம் பதினெட்டாம் படியே சரணம் ஐயப்பா;
96. ஓம் பகவானின் புண்ணியமே சரணம் ஐயப்பா;
97. ஓம் பரவசப் பேருணர்வே சரணம் ஐயப்பா;
98. ஓம் பசுவின் நெய் அபிஷேகமே சரணம் ஐயப்பா;
99. ஓம் கற்பூரப் பிரியனே சரணம் ஐயப்பா;
100. ஓம் நாகராசப் பிரபுவே சரணம் ஐயப்பா;
101. ஓம் மாளிகைப் புரத்தம்மனே சரணம் ஐயப்பா;
102. ஓம் மஞ்சமாதா திருவருளே சரணம் ஐயப்பா;
103. ஓம் அக்கினிக் குண்டமே சரணம் ஐயப்பா;
104. ஓம் அலங்காரப் பிரியனே சரணம் ஐயப்பா;
105. ஓம் பஸ்மக் குளமே சரணம் ஐயப்பா;
106. ஓம் சற்குரு நாதனே சரணம் ஐயப்பா;
107. ஓம் மகர ஜோதியே சரணம் ஐயப்பா;
108. ஓம் மங்கள மூர்த்தியே சரணம் ஐயப்பா;

ஓம் அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்து காத்து ரட்சிக்க வேண்டும். ஓம் ஸ்ரீ சத்தியமான பொன்னு பதினெட்டாம் படி மேல் வாழும் வில்லாலி வீரன் வீரமணிகண்டன் காசி ராமேஸ்வரம் பாண்டி மலையாளம் அடக்கி ஆளும் ஓம் ஸ்ரீ ஹரிஹரசுதன் ஆனந்த சித்தன் அய்யன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா.

தினமும் ஐயன் 108 சரண கோவையை காலை மாலை பாராயணம் செய்து இஷ்ட சித்திகளை அடையுங்கள்.

சாமியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்தா பஞ்ச ரத்னம் ஸ்ரீ சாஸ்தா அஸ்டகம்

மூஷிக வாகன மோதக ஹஸ்த
ஸாமர கர்ண விளம்பித சூத்ர
வாமன ரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாதநமஸ்தே

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

லோகவீரம் மஹா பூஜ்யம்
ஸர்வ ரக்ஷ்கரம் விபும்
பார்வதீ ஹ்ருயானந்தம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
(சாமியே சரணம் ஐயப்பா)

விப்ரபூஜ்யம் விஸ்வ வந்த்யம்
விஷ்ணு சம்போப்ரியம் ஸதம்
ஷிப்ர ப்ரஸாத நிரதம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
(சாமியே சரணம் ஐயப்பா)

மத்த மாதங்க கமனம்
காருண்யாம்ருத பூரிதம்
ஸர்வ விக்னஹரம் தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
(சாமியே சரணம் ஐயப்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்மத் குலேஷ்வரம் தேவம்
அஸ்மத் சத்ரு விநாசனம்
அஸ்மத் நிஷ்ட ப்ரதாதாரம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
(சாமியே சரணம் ஐயப்பா)

பாண்ட்யேச வம்ஸதிலகம்
கேரள கேளிவிக்ரஹம்
ஆர்த்தத்ராண பரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
(சாமியே சரணம் ஐயப்பா)

பஞ்சரத்னாக்கியமே தத்யோ
நித்யசுத்தப்படேன் நரஹா
தஸ்யப் பிரசன்னோ பகவான்
சாஸ்தாவசதி மானஸே
(சாமியே சரணம் ஐயப்பா)

ஸ்ரீ பூத நாதா சதானந்த
ஸர்வ பூத தயா பரா
ரட்சரட்ச மஹா பாஹோ
ஸாஸ்த்ரே துப்யம் நமோ நம
(சாமியே சரணம் ஐயப்பா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் கணநாயகா

கணநாயகா எங்கள் கணநாயகா
கணங்களின் நாயகனே கணநாயகா
துணை நீயடா சுவாமி துணை நீயடா
துயர்தன்னை தீர்த்திடுவாய் கணநாயகா

மலை நாயகா எங்கள் மலை நாயகா
மலைக்கோட்டை வாழுகின்ற மலை நாயகா
மருந்தாகையா மன மருந்தாகையா
மனத்துயரை தீர்க்க நீயும் மருந்தாகையா

முதல் நீயடா மூலப் பொருள் நீயடா
மூவுலகை காக்கும் இணை நீயடா
பணிந்தேனடா உன்னைப் பணிந்தேனடா
பணிந்தோர்க்கு அருள் புரிவாய் கணநாயகா

பகை தீரையா படை பகை தீரையா
பலம் தன்னை தந்து நீயும் பயம் தீரைய்யா
பார் நீயடா என்னைப் பார் நீயடா
பார் போற்றும் நாயகனே பார் நீயடா

சரண் புகுந்தேனடா உன்னைப் பணிந்தேனடா
சரணங்கள் கூப்பிடவே அருள்வாயடா
கணநாயகா எங்கள் கணநாயகா
கணங்களின் நாயகனே கணநாயகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைநிறை கணபதி

கலைநிறை கணபதி சரணம் சரணம்
கஜமுகக் குணபதி சரணம் சரணம்
தலைவனின் இணையடி சரணம் சரணம்
சரவணபவ குக சரணம் சரணம்.
- கலைநிறை கணபதி சரணம் -

கண்கண்ட தெய்வமே கன்னிமூல கணபதியே
சுமுகா என்றால் சுகமே தருவாய்
பிரணவ ரூபம் பிங்கள ரூபம் பம்பா கணபதியே
வினைகள் யாவும் விலக்கிடச் செய்வாய்.
- கலைநிறை கணபதி சரணம் -

ஓம் எனும் பிரணவ ரூபா கணபதியே
அருள் தந்து தினமும் காப்பாய்
உன்பாதம் சரணடைந்தேன் நாதா கணபதியே
விரைவாய் வந்து வரம் தருவாய்.
- கலைநிறை கணபதி சரணம் -

அன்பருக்கு அன்பனே நீ வாவா முருகா
ஆறுபடை வீடுடையாய் வாவா முருகா
இன்பமய ஜோதியே நீ வாவா முருகா
ஈசனுமை பாலகனே வாவா முருகா
உலகநாதன் முருகனே நீ வாவா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே நீ வாவா முருகா
எட்டுக்குடி வேலவனே நீ வாவா முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுமயில் ஏறியே நீ வாவா முருகா
ஐங்கரனுக்கு இளையவனே நீ வாவா முருகா
ஒய்யார வள்ளி வேலா வாவா முருகா
ஓங்கார தத்துவமே வாவா முருகா
ஔவைக் குவதேசித்தவா வாவா முருகா
அகில லோக நாயகனே வாவா முருகா.

## சமயபுரத்தாளே மாரியம்மா

சமயபுரத்தாளே மாரியம்மா - அம்மா
சங்கரியே எங்கள் முன்னே வாருமம்மா
சமயபுரத்தாளே மாரியம்மா - அம்மா
சங்கரியே எங்கள் முன்னே வாரும்மா.

- சமயபுரத்தாளே மாரியம்மா -

மல்லிகை சரம் தொடுத்து மாலையிட்டோம்
அரிசி மாவிளக்கு ஏற்றி வைத்து பொங்கல்
வைத்தோம் துள்ளியே எங்கள் முன்னே வாருமம்மா
அம்மா - தூயவளே என் தாயே மாரியம்மா.

- சமயபுரத்தாளே மாரியம்மா -

பட்டுப் பீதாம்பரத்திள தாவணியும் - உனக்கு
பாவாடை சேலைகளும் கொண்டு வந்தோம்
எட்டுத் திசைகளையும் ஆள்பவளே - அம்மா
ஈஸ்வரியே என் தாயே மாரியம்மா.

- சமயபுரத்தாளே மாரியம்மா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திக் கதறுகிறோம் கேட்கலியோ - தாயே
கல்லோதான் உன் மனம் கரையலையோ
உலகமெல்லாம் ஆடுதம்மா உன் சிரிப்பாலே
எங்கள் உமையவளே என் தாயே மாரியம்மா.
- சமயபுரத்தாளே மாரியம்மா -

## ஸ்ரீ ஐயப்பன் கவசம்

### காப்பு

அரிஹர புத்ரனை ஆனந்த ரூபனை
இருமூர்த்தி மைந்தனை ஆறுமுகன் தம்பியை
சபரிகரீசனை சாந்த சொரூபனை
தினம் தினம் போற்றி பணிந்திடு வோமே.

ஐயப்பா தேவன் கலசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினந்தினம் துதிக்கத்தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமுடன் வருமே.

### நூல்

மண்ணுலகெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக.

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரனை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத நாயகா வருக வருக
புஷ்களை பதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக.

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக.

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனை யாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக.

பதினென் படியை மனதில் நினைக்க
புண்ணிய பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே சொல்லிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே.

சபரிகிரீசனை நினைத்தே நீறிட
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே.

பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர் களெல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பா பாதம் அனுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடிபணிந்திடுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் சரணம் ஐயப்ப சரணம்
சரணம் சரணம் சபரிகிரீசா
சரணம் சரணம் சத்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்.

## வேண்டுதல்

சிவனார்மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க.

இருமூர்த்தி மைந்தன் என் இருசெவி காக்க
வாபரின் தோழன் வாயினைக் காக்க
பம்பையின் பாலன் பற்களை காக்க
நான்முக பூஜ்யன் நாவினைக் காக்க.

கலியுக வரதன் என் கழுத்தினை காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களை காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையை காக்க.

வீரமணிகண்டன் விரல்களை காக்க
மணிகண்டதேவன் மார்பினைக் காக்க
கயிலை மைந்தன் கைகளை காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமுதற் கடவுள் என் முதுகினை காக்க
இருமுடிப்பிரியன் என் இடுப்பினை காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம சாஸ்தா துடைதனைக் காக்க.

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினை காக்க
விஜய குமாரன் என் விரல்களை காக்க.

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
அரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாளரூபி காலையில் காக்க
நவக்கிரஹநாதன் நடுப்பகல் காக்க.

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எருமேலி சாஸ்தா என்றுமே காக்க.

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலபுரம் காக்க
இருமுடி ஈசன் இடபுரம் காக்க.

காக்க காக்க கருணையால் காக்க
பார்க பார்க என் பாவம் பொடிபட
இன்மையும் வறுமையும் இல்லாதொழிந்திட
ஈசன் மகனார் என்றுமே காக்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய விலங்குகளும் கொள்ளை நோய்களும்
குருதியை குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலை தனைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திட கருணை புரிவாய்.

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களை போக்கி அபயம் அளிப்பாய்.

வாதம் பித்தம் சிலேட்சுமத்துடனே
வாந்தியும் பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணு காமல்
என்றுமே காப்பாய் எருமேலி தேவா.

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனத்துடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரிகரீசா.

காமம் குரோதம் லோபம் மோஹம்
மதமாச் சர்யமெனும் ஐம்பெரும் பேய்களும்
என்றுமே என்னை அணுகிவிடாமல்
ஐயப்பா தேவா வரமெனக் கருள்வாய்.

சூது பொறாமை பொய் கோபமில்லாமல்
சேரம் லோமம் துன்மார்க்கம் கல்லாமல்
வேதம் நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணிகண்டா வரமெனக் கருள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதைசெய் யாமல்
உள்ளன் புடனே உன் திரு நாமம்
அனுதினம் சொல்ல அருள் தருவாயே.

## நமஸ்காரம்

அரிஹர புத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ.

பொன்னம் பலத்துறை புண்யா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்யா நமோ நமோ
சுரிகா யுதமுடைச் சுந்தரா நமோ நமோ
முஹிஷி மர்த்தனா மணிகண்டா நமோ நமோ.

சரணம் சரணம் சபரிகரிசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னை நான் தினமும்

உன்னை நான் தினமும் போற்றிப் பாடுவேன்
உருவமாய் எனக்குள் எண்ணி வாழ்கிறேன்
மகர ஜோதியாய் வந்து நீ நேரிலே பக்தரை
கண்கொண்டு பார்க்கும் தெய்வம் நீயே.
- உன்னை நான் தினமும் -

நீ வளர்ந்த பந்தள வீட்டில் இரு நாள் தங்கி
இருமுடி கட்டிவர எனக்கொரு வரம் தந்தாய்
பந்தளத்துப் பாதையிலே பாதங்கள் புண்படவே
பகவானை தரிசிக்க பலமாக நடந்தேனே
பதினெட்டுப் படியேற பாதப்புண் ஆறியதை
கண்ணாரக் கண்டேனே என்னருமை ஐயப்பா.
- உன்னை நான் தினமும் -

இலங்கையின் தங்கக் கிரீடத்தை நீ சூட நாம் சுமந்தோம்
நீ சூடி நான் காண எனக்கொரு வரம் தந்தாய்
நீ தந்த அருளாளே பிறவிப்பயன் அடைந்தேனே
உன் பெருமை அறிந்ததனால்
என்றும் உன் பக்தனானேன் உனக்காக
வாழ்வேனப்பா என்னருமை ஐயப்பா.
- உன்னை நான் தினமும் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை நீயும் போட்டுப்பாரு

மாலை நீயும் போட்டுப்பாரு - அந்த
மலைக்கு நீயும் வந்துபாரு - அந்த
இருமுடியை நீயும் கட்டிப்பாரு - அந்த
ஐயன் படிகளிலே நீயும் ஏறிப்பாரு.
மாலை நீயும் போட்டுப்பாரு - அந்த

யானை புலி பாம்பிருக்கும் சபரிமலைக் காட்டிலே
உள்ளம் சிலிக்க வைக்கும் சாமியுண்டு
மனதை குளிரவைக்கும் மகர ஜோதியுண்டு
அருளை பொழியும் அந்த ஈசன் துணையு முண்டு.
மாலை நீயும் போட்டுப்பாரு - அந்த

குன்று குழிகள் நதிகள் நிறைந்த அழுதைமலை
காட்டிலே அந்த ஐயப்பன் உன் துணை வருவதை
நீயறிவாய் - மனதார சரணகோசம் பாடிடு
உன் மனக்கவலைகள் தீரும் வந்து பாரு.
மாலை நீயும் போட்டுப்பாரு - அந்த

கல்லு முள்ளு பாறை உள்ள கரிமலை காட்டிலே
அந்த ஐயப்பன் பாதபலம் தேகபலமூட்டி கூட்டிச்
செல்வதை நீயறிவாய் - மனதார அவர் நாமம் பாடிடு
உன் மனக் கவலை தீருமையா வந்து பாரு.
மாலை நீயும் போட்டுப்பாரு - அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபரிமலை மேல்இருக்கும் ஐயனுக்காக - வனத்திலே
விலங்குகள் கூட உனக்காக வழிவிட்டு செல்லுதையா
எத்தனை ஆச்சரியமப்பா பெரும் காட்டு வழிப்பாதையிலே
மாலை ஒன்று போடு வந்து நீயும் பாரு.

மாலை நீயும் போட்டுப்பாரு - அந்த

## கட்டுநிறை கட்டலாமா குருசாமி

கட்டு நிறை கட்டலாமா குருசாமி
ஐய்யன் உத்தரவு வரும்வரை பொறு சாமி
காடு மலை பார்க்கலாமா குரு சாமி
அந்த காலம் வந்து சேரும்வரை பொறு சாமி
பெருமைகளை சொல்லுங்களேன் குரு சாமி
நீங்க கேள்விகளை கேட்டிடுங்க கன்னிச்சாமி
அது வரையும் என்ன செய்ய குருசாமி
ஐய்யன் பெருமைகளை பேசுவோமே கன்னிச்சாமி.

குருசாமி எங்க குருசாமி நீங்க கண்ட
உண்மை சொல்லிடுங்க குருசாமி.....

துளசி மாலை போடுவதேன் குருசாமி
அது துள்ளும் மனச கட்டி போடும் கன்னிச்சாமி
நீல வண்ண ஆடை ஏனோ குருசாமி
அந்த சத்தம் நம்மை வாழ வைக்கும் கன்னிச்சாமி
மனசு வானம் போல தெளிஞ்சதுன்னு சொல்லு சாமி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள் சொல்லுவதேன் குருசாமி
விரதமென்று சொல்லுவதும் என்ன சாமி
அது மனிதர்களைத் தெய்வமாக்கும் வித்தை சாமி

குருசாமி எங்க குருசாமி நீங்க சொன்ன
சொல்லு அத்தனையும் உண்மை சாமி.....

கட்டு நிறை கட்டலாமா குருசாமி

இரு முடியின் அர்த்தமென்ன குருசாமி
நம்ம இருதயத்தின் வடிவமது கன்னிச்சாமி
நெய்யோட அர்த்தமென்ன குருசாமி
அது ஐய்யன் மேல நாம வைத்த அன்பு சாமி
அன்னதானம் போடுவதும் ஏங்க சாமி
அவன் பசி பொறுக்கமாட்டானே கன்னிச்சாமி
அன்னமிடும் கடவுளுக்கே பசியா சாமி
அது பசியல்ல பாசமப்பா கன்னிச்சாமி

குருசாமி எங்க குருசாமி நீங்க சொன்ன
சொல்லு அத்தனையும் உண்மை சாமி.....

கட்டு நிறை கட்டலாமா குருசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாத என்பதுவும் என்னசாமி
அந்த பெரியவனே நடந்து போன பாதசாமி
ஆன புலி அங்க உண்டா குருசாமி
அது அத்தனையும் தேவர்களாம் கன்னிச்சாமி
குன்று குளி உள்ளதாமே குரு சாமி
போடும் சரணங்களால் குளி நிறம்பும் கன்னிச்சாமி
கரிமலையும் கடினமாமே குரு சாமி
அது கால்களுக்கு உறுதி தரும் கடவுள் சாமி

குருசாமி எங்க குருசாமி நீங்க சொன்ன
சொல்லு அத்தனையும் உண்மை சாமி.....

வாபரென்று சொல்லுவதும் யாரு சாமி
நம்ம தோழருக்கும் தோழனையா கன்னிச்சாமி
பம்பை நிதி என்பதுவும் என்ன சாமி
நம்மை பண்படுத்தும் தெய்வமது கன்னிச்சாமி
மகரஜோதி எப்படியிருக்கும் குருசாமி
என் கண்களிடம் கேட்டுப்பாரு சொல்லும் சாமி
நானுமதை காண்பதெப்போ குருசாமி
இதோ அந்த நாளும் நெருங்கிடுச்சே கன்னிச்சாமி.

குருசாமி எங்க குருசாமி எங்கள் அறிவுக்
கண்ணை திறந்து வைத்த குருசாமி.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காடு மலை கவலையில்லை

சரணம் சரணம் - சரணம் சரணம் - சரணம் சரணம்
சரணம் சரணம் - சாமி சரணம் ஐயப்ப சரணம் ஐயப்பா

காடு மலை கவலையில்லை கல்லும் முள்ளு பஞ்சு மெத்தை பள்ளிக்கட்டு சபரிமலையிலே பந்தளத்து வேந்தன் அருளிலே.

சரணம் சரணம் - சரணம் சரணம் - சரணம் சரணம்
சரணம் சரணம் - சாமி சரணம் ஐயப்ப சரணம் ஐயப்பா

கார்த்திகையிலே மாலையிட்டு கடும் விரதம் தவம் இருந்து
பார்த்திருந்த ஆவலெல்லாம் கண்ணெதிரே தீருமையா
பூத்திருந்த மலர் பொழிந்து பூசையிட்ட நேசம் எல்லாம்
புண்ணியத்தின் பலனாக புன்னகையை அருளுதையா
ஐயா உன் பதம் சேர ஆனந்தமே மலருதையா
(காடு மலை கவலையில்லை)

காடு மலை மேடெல்லாம் காற்று வந்து கவிதை சொல்லும்
சந்தனத்தின் வாசமுடன் சந்நதிக்கே வழி செல்லும்
இருமுடி தலை மீது மணிமுடியாய் ஒளி மின்னும்
பதினெட்டுப் படியேற பாதம் எங்கே தரையைத் தொடும் பரவசம்
அலைபாய கண்னெதிரே ஐயன் முகம்.
(காடு மலை கவலையில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலத்தை ஆளும் அந்த ஐயனுக்கு அபிஷேகம்
காணுகின்ற கண்களுக்குள் கண்ணீரின் அபிஷேகம்
மங்களத்து மகராஜன் மகரஜோதி ஒளி தீபம் கற்பகத்து
அருள் வேண்டி கண்கள் எல்லாம் சரணம் இடும்.
முற்பிறவி எடுத்த பயன் இனிதாக நிறைவேறும்.
(காடு மலை கவலையில்லை)

## வில்லாதி வீரா வீரமணி கண்டா

சுவாமி திந்தக்கத்தோம் தோம் ஐயப்ப திந்தக்கத்தோம் தோம்
எறுமேலி கரமேலி பேட்டை துள்ளுவோம் திந்தக்கத்தோம்
பாட்டு பாடி கொண்டாடுவோம்.

வில்லாதி வீரா வீரமணி கண்டா நினைக்காத
நாள் ஏதையா நீ இல்லாமல் நான் ஏதையா.

எறுமேலி கரமேலி பேட்டை துள்ளுவோம்
திந்தக்கத்தோம் பாட்டு பாடி கொண்டாடுவோம்.

ஆள் ஏதும் இல்லாத கானகத்தை தேடி அஞ்சாமல்
வலம் வந்த அசகாய சூரா (சாமியப்பா சரணமப்பா
வாபரின் தோழா சரணமப்பா) அடங்காத புலி மேலே
அழகாக ஏறி அஞ்ஞானம் தீர்க்க வந்த மெய்ஞான
வேதா. கன்னிமூல கணபதிதான் காவலுக்கு இருக்க
கண்களினால் அருள் சிந்தும் காந்தமலை தேவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லாதி வீரா வீரமணி கண்டா நினைக்காத
நாள் ஏதையா நீ இல்லாமல் நான் ஏதையா.

எறுமேலி கரமேலி பேட்டை துள்ளுவோம்
திந்தக்கத்தோம் பாட்டு பாடி கொண்டாடுவோம்.

உறவேதும் அறியாமல் உனக்காக வாழும் வாபருக்கு தோழனாக வனமாளும் ராஜ (பம்பா வாசா சரணமப்பா பந்தள ராஜா சரணமப்பா) கரம் ஏந்தும் வில்லாலே மகிஷியை வதைத்து கற்பூர ஜோதியாய் ஒளி சிந்தும் தேவா. எங்கெங்கும் பார்த்தாலும் எழில் வண்ணக்கோலம் எரிமேலி மண்ணெங்கும் வானவில்லின் ஜாலம்.

வில்லாதி வீரா வீரமணி கண்டா நினைக்காத
நாள் ஏதையா நீ இல்லாமல் நான் ஏதையா.

எறுமேலி கரமேலி பேட்டை துள்ளுவோம்
திந்தக்கத்தோம் பாட்டு பாடி கொண்டாடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவமெல்லாம் தீர்க்கும் மலை

பாவமெல்லாம் தீர்க்கும் மலை சபரிமலை - ஐயப்பா
பம்பா நதி ஓடும் மலை சபரிமலை - ஐயப்பா
பந்தளத்து கோட்டை இந்த சபரிமலை - ஐயப்பா
சந்தனவாசம் வீசும் மலை சபரிமலை - ஐயப்பா

சாமியே சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
சாமியே சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா

ஆனந்தப் பிரியனே அருள்தரும் ஐயனே - சரணம் ஐயப்பா
மோகனப் பிரியனே வில்லாளி வீரனே - சரணம் ஐயப்பா
ஆனந்த ரூபனே ஆபத்தாந்தவனே - சரணம் ஐயப்பா
மாளிகைப்புரத்து மஞ்ச மாதாவே - சரணம் ஐயப்பா

ஏழைகளின் மாளிகையாம் சபரிமலை - ஐயப்பா
ஐந்து மலை அடங்கியது சபரிமலை - ஐயப்பா
நாலு வேதம் முளங்கும் மலை சரிமலை - ஐயப்பா
நம்பினோரை கைவிடாத சபரிமலை - ஐயப்பா

சாமியே சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
சாமியே சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
(பாவமெல்லாம் தீர்க்கும் மலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்புலி ஏறும் அரிகரன் மைந்தா - சரணம் ஐயப்பா
ஏழைக் கிரங்கும் மாமலை ஐயா - சரணம் ஐயப்பா
காந்த மலையின் ஜோதி ரூபா - சரணம் ஐயப்பா
அம்மையே அப்பா எங்குரு நாதா - சரணம் ஐயப்பா

கம்பீரமாய் ஓடி நிற்கும் சபரிமலை - ஐயப்பா
கன்னிச் சாமி கனவில் வரும் சபரிமலை - ஐயப்பா
மலைகலெல்லாம் வணங்கும் மலை சபரிமலை - ஐயப்பா
மணிகண்டன் வாழும் மலை சபரிமலை - ஐயப்பா

சாமியே சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
சாமியே சரணம் ஐயப்பா சரணம் சரணம் ஐயப்பா
(பாவமெல்லாம் தீர்க்கும் மலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெட்டு : தாணதந்தன தாணதந்தென தாணதந்தென தண்ணானே (2 தடவை)**

குரு : சபரிமலையிலே! சரணகோஷம்தனை சகீதி என்றென்னியே பாடிடப்பா!

சீடன் : தீம்த தித்தித்தோம், தீம்த தித்தித்தோம், தீம்த தித்தித்தோம், தில்லாலே!

குரு : காடுமலை தன்னில் பாடியே! என்னிடம் ஓடியே! இங்கு நீ வந்திடப்பா!

சீடன் : தீம்த தித்தித்தோம், தீம்த தித்தித்தோம், தீம்த தித்தித்தோம், தில்லாலே!

குரு : ஹரிகரசுதனாம் ஐயன் ஐயனை சரணம் விளித்து நீ பாடிடப்பா!

சீடன் : தீம்த தித்தித்தோம், தீம்த தித்தித்தோம், தீம்த தித்தித்தோம், தில்லாலே!

குரு : இருமுடி தாங்கியே! இதயசுத்தியுடன் இணைந்து நீ சரணங்கள் முழங்கிடப்பா!

சீடன் : தீம்த தித்தித்தோம், தீம்த தித்தித்தோம், தீம்த தித்தித்தோம், தில்லாலே!

குரு : பதினெட்டுப் படிதனை மனதிலே! நினைக்க புண்ணிய பாவங்கள் பொடியப்பா!

சீடன் : தீம்த தித்தித்தோம், தீம்த தித்தித்தோம், தீம்த தித்தித்தோம், தில்லாலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு : மண்ணுலகெல்லாமே! காத்தருள் என்றிங்கு!
மணிகண்டதேவனை பாடிடப்பா!

சீடன் : தீம்த தித்தித்தோம், தீம்த தித்தித்தோம், தீம்த
தித்தித்தோம், தில்லாலே!

குரு : புலிவாகனம் கொண்டு புவியெல்லாம் காத்திடும்
பூரணை நாதனை பாடிடப்பா!

சீடன் : தீம்த தித்தித்தோம், தீம்த தித்தித்தோம், தீம்த
தித்தித்தோம், தில்லாலே!

குரு : ஐயப்பன் பாதத்தை அனுதினம் நினைக்க
அவனியில் உள்ளோரும் அடிபணிவார்!

சீடன் : தீம்த தித்தித்தோம், தீம்த தித்தித்தோம், தீம்த
தித்தித்தோம், தில்லாலே!

குரு : கன்னிமலை அது, பொன்னிமலை அது, புண்ணிய
மலையது சபரிமலை

சீடன் : தீம்த தித்தித்தோம், தீம்த தித்தித்தோம், தீம்த
தித்தித்தோம், தில்லாலே!

குரு : பந்தள மாமணி பரந்தாமன் மைந்தனின் பாதங்கள்
பற்றியே! சரணம் சொல்வோம்

சீடன் : தீம்த தித்தித்தோம், தீம்த தித்தித்தோம், தீம்த
தித்தித்தோம், தில்லாலே!

ஓம் காந்த மலை ஜோதியே! சாமியே சரணம்
ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பக்திப்பாடல் மெட்டு :**

**வலம்புரி நாயகனின் வாசல் வந்து சேர்ந்த**
**பின்பே நலம் பல காண்போமையா!**

சபரிவாழ் ஐயப்பன் சரணங்கள் சொல்லிடவே! சடுதியாய் வந்தோமையா! ஐயன் அருள் புகழ் கண்டோமையா!

தத்துவங்கள் சொல்லுகின்ற சபரிமலைதனிலே!
எத்தனை மனதில் புதுமை! புவி அத்தனையும் சரண மகிமை!

ஒரு சத்தியத்தின் ஜோதி என வெற்றி தரும் வீரனென சபரிமலை அமர்ந்த இறைவன் ஏழை சரணங்களில் வாழும் தலைவன்.

(சபரிவாழ் ஐயப்பன்....)

காடான காடதிலே காலார நடை பயின்று ஈடேற வந்தோமையா!
ஐயன் புகழ் பாடப் பிறந்தோமையா!
நாம் இருமுடி தலைக்கொண்டு இறைவா என் மனதென்று உமைநாடி!
வந்தோமையா! பம்பையில் உருகியே! நின்றோமையா!

(சபரிவாழ் ஐயப்பன்....)

வில்லாதி வில்லனே! வீரமணிகண்டனே!
சாமியே! சரணம் ஐயப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பம்பை நதிக்கரையோரம் ஆயிரமாம்

பம்பை நதிக்கரையோரம் ஆயிரமாம் அகழ் தீபம்
மண்ணில் வந்த தாரகையாய் மணிகண்டன் புகழ் பாடும்
ஆத்து வண்ண காட்டுக்குள்ளே அந்தி சாயும்
நேரத்திலே ஐயப்பனின் அருளாலே ஆற்றங்கரையில் ஒளி வெள்ளம்.

ஐயனை நினைத்து அன்புடன் ஒளிரும் அழகு தீபங்கள். வைகரை முழுதும் இருளை நீக்கி சுடரும் தீபங்கள்.
- பம்பை நதிக்கரையோரம் -

மேகம் என்னும் இருள் நீக்க முதல்வன் அவன் ஒளி விளக்கு
ஆணவத்தை வேரறுக்கும் ஐயன் வீரமணி விளக்கு
தேடுகின்ற கண்களுக்கு தெரியும் அவன் திரு விளக்கு
தெய்வீக ஒளி நிறைந்த மகர தீப அருள் விளக்கு.

ஐயனை நினைத்து அன்புடன் ஒளிரும் அழகு தீபங்கள். வைகரை முழுதும் இருளை நீக்கி சுடரும் தீபங்கள்.
- பம்பை நதிக்கரையோரம் -

தங்கமணி சுடர் ஏந்தும் எங்கள் ஐயன் திருவிளக்கு
தஞ்சமென வந்தவர்க்கு துணையாகும் ஒளிவிளக்கு
நேசம் என்னும் உயிர் சுமந்து உயிர் உருக்கும் நெய்விளக்கு
பாசமணிகண்டன் அவன் பாதம் வணங்கும் கைவிளக்கு.

ஐயனை நினைத்து அன்புடன் ஒளிரும் அழகு தீபங்கள். வைகரை முழுதும் இருளை நீக்கி சுடரும் தீபங்கள்.
- பம்பை நதிக்கரையோரம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கோ

எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கோ. எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கோ. ஐயனின் நாமத்தை ஐயப்பன் நாமத்தை
எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கோ
எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கோ.

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா

முத்து மணி பவள நகை புன்சிரிப்பை பாருங்கோ
மாதவனை மெய்யப்பனை மனமகிழ்ந்து பாடுங்கோ
குழந்தை உள்ளம் கொண்டவனை கோடி மக்கள் பாடுங்கோ
அழகு மலை ஓடி வந்து அபிஷேகம் செய்யுங்கோ.

- எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கோ -

கேட்டதெல்லாம் கொடுப்பவனை கீர்த்தியுடன் பாருங்கோ
நினைத்ததெல்லாம் முடிப்பவரை பக்தியோடு நாடுங்கோ
நாட்டமுடன் பதினெட்டு படியேறி கூடுங்கோ
பந்தள குமரனை பணிவுடன் பாடுங்கோ.

- எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கோ -

சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா சுவாமி சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபரிமலைக்கு மாலையணிந்து

**அரிகரபுத்திரன் ஆனந்தமானவன் அருள் தரும் ஐயப்பனே**
**அந்தமிலாதவன் சங்கர சுந்தர பந்தள மன்னவனே.**

சபரிமலைக்கு மாலையணிந்து வந்து பாருங்க. சத்திய வேதம் சாஸ்தா நாமம் சரணம் பாடுங்க. இந்த பூமியில் எந்த நாளுமே சொந்தம் யாருங்க. வன்புலி வாகனன் மோகினி பாலன் அருளை தேடுங்க.

**அரிகரபுத்திரன் ஆனந்தமானவன் அருள் தரும் ஐயப்பனே**
**அந்தமிலாதவன் சங்கர சுந்தர பந்தள மன்னவனே.**

(சபரிமலைக்கு மாலையணிந்து)

ஞாயிறு திங்கள் நாட்கள் மாறும். ஞானம் மாறுமா. கார்த்திகை மார்கழி காலங்கள் மாறும் கருணை மாறுமா. அணிகலன் ஆசைகள் மாறும் அருளில் மாற்றமா. அவனியில் காணும் அனைத்திலும் மாற்றம். அவனில் மாற்றமா. பூமகள் பாதம் தேடிடும் பக்தியில் சரண கோஷமே பாவங்கள் தீண்டும் வினைகள் ஓடுமே.

**அரிகரபுத்திரன் ஆனந்தமானவன் அருள் தரும் ஐயப்பனே**
**அந்தமிலாதவன் சங்கர சுந்தர பந்தள மன்னவனே.**

(சபரிமலைக்கு மாலையணிந்து)

பந்தள நாட்டின் ராச்சியம் துறந்த தியாக மைந்தனே. வன்புலி தோழன் வாகனமாக வாழும் வீரனே. சேனைகள் என்ன சேவகம் என்ன காவல் காக்குமா. மாளிகை மஞ்சம் அரண்மனை என்ன புனிதம் சேர்க்குமா. பக்தியின் மூலம் பரவசம் காண தவத்தில் மூழ்கினாய். வானக சொர்க்கம் வையகம் புகழ சபரி ஆழ்கிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரிகரபுத்திரன் ஆனந்தமானவன் அருள் தரும் ஐயப்பனே**
**அந்தமிலாதவன் சங்கர சுந்தர பந்தள மன்னவனே.**

(சபரிமலைக்கு மாலையணிந்து)

தங்கம், வெள்ளி, வைரங்கள் தேடும் வாழ்க்கை நாடகம் வந்ததை எண்ணி ஆடிடும் ஆட்டம் என்ன சாஸ்வதம் வாழ்க்கையின் தத்துவம். தத்துவம் உணர்ந்தால் அவனருள் கிடைக்கும். சத்தியம் வாபரின் தோழன். வன்புலி வாகனன் கருணை நிச்சயம். புகழிடம் அவனது திருப்பாதம் என்றே புகழைப் பாடுவோம். நெஞ்சில் நடமிடும் ஐயன் சந்நிதி நின்றே அருளை நாடுவோம்.

**அரிகரபுத்திரன் ஆனந்தமானவன் அருள் தரும் ஐயப்பனே**
**அந்தமிலாதவன் சங்கர சுந்தர பந்தள மன்னவனே.**

(சபரிமலைக்கு மாலையணிந்து)

## பொய்யின்றி மெய்யோடு

பொய்யின்றி மெய்யோடு நெய் கொண்டு போனால் ஐயனை நீ காணலாம் சபரியில் ஐயனை நீ காணலாம்.

(ஐயப்பா சுவாமி ஐயப்பா...)

அவனை நாடு அவன் புகழ்பாடு புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன் உன்னை புகழோடு வாழ வைப்பான் ஐயப்பன் இருப்பது காடு. வணங்குது நாடு. அவனைக் காண தேவை பண்பாடு.

(ஐயப்பா சுவாமி ஐயப்பா...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜைகள் போடு தூய அன்போடு பெயரோடு
வாழவைப்பான் ஐயப்பன்
நல்ல பெயரோடு வாழவைப்பான் ஐயப்பன்.
அனைவரும் வாருங்கள் ஐயனை நாடுங்கள்
அருள் வேண்டும் அன்பரை எல்லாம் வாழ வைப்பான்
(ஐயப்பா சுவாமி ஐயப்பா...)

## கார்த்திகையில் மாலையிட்டு

கார்த்திகையில் மாலையிட்டு மார்கழியில்
நாள் குறித்து கட்டு நிறை கட்டியாச்சு ஐயப்பா
உன் உத்தரவு வந்திருக்கு குருசாமி முன்
நடக்க - சந்நிதானம் கிளம்பியாச்சு ஐயப்பா.
- கார்த்திகையில் மாலையிட்டு -

கோயில் பல பார்த்து வந்து கோட்டயத்த
தாண்டி வந்து எருமேலி சேர்ந்து விட்டோம்
ஐயப்பா - வாபருக்கு வண்ணம் சொல்லி
வண்ணம்பூசி பேட்டை துள்ளி வனப்பாதை
புகுந்து விட்டோம் ஐயப்பா.

பேருரு காளை கட்டி அதை அடுத்து அழுதையாறு
கல் எடுத்து குன்றிலிட்டோம் ஐயப்பா
உடும்பாறை கோட்டையிலே உச்சிப்பகல் வேளையிலே
உன் நினைப்பில் உருகினோமே ஐயப்பா.
- பாதபலம் தா ஐயப்பா -
- தேகபலம் தா ஐயப்பா -
அடுத்து வரும் கரிமலையில் ஏற்றிவிடுங்க ஐயப்பா
- கார்த்திகையில் மாலையிட்டு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிமலையின் உயரத்திலே கால் கடுக்க ஏற்றி வைச்சு பார்ப்பதெல்லாம் நீதானே ஐயப்பா - கரிமலையின் இறக்கத்திலே தண்ணியைப் போல் ஓட வைச்சு இறக்கி விட்ட மாயம் என்ன ஐயப்பா.

சிறியானை வட்டம் தொட்டு பெரியானை வட்டத்திலே களைப்பாறி புறப்பட்டோம் ஐயப்பா - பம்பை நதி ஓடிவந்து காலைத் தொட்டு போகையிலே உச்சி குளிர்ந்து போனதையா ஐயப்பா.

- பம்பா வாசா ஐயப்பா -

- பந்தள ராஜா ஐயப்பா -

பெருவழியை கடக்க வைச்ச பெரிய சாமி நீதானப்பா

- கார்த்திகையில் மாலையிட்டு -

பம்பையிலே நீராடி கணபதிக்கு பூச்சூடி நீலிமலை ஏற விட்டாய் ஐயப்பா - அப்பாச்சி மேடேத்தி சபரிபீடம் தான் காட்டி சரங்குத்த சொல்லித் தந்தாய் ஐயப்பா
பதினெட்டாம் படியேத்தி அம்பலத்தை உடன் காட்டி
புன் சிரிப்பாய் பூத்தாயே ஐயப்பா
நாங்க மலையாகி சிலையாகி உன் முகத்தில் பித்தாகி
கல்லாகி கசிந்தோமே ஐயப்பா.

- சாமியப்பா ஐயப்பா -

- சரணமப்பா ஐயப்பா -

சரணடைந்த எங்களை காக்க வேண்டும் ஐயப்பா.

- கார்த்திகையில் மாலையிட்டு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் என்றும் உனக்காக

இதயம் என்றும் உனக்காக ஐயப்பா - உன்
பாதமலரே துணை நமக்கு ஐயப்பா நிதமும்
உந்தன் நாமம் சொல்வேன் ஐயப்பா உனை
நினைந்து நினைந்து உருகிட வேண்டும் ஐயப்பா.
- இதயம் என்றும் உனக்காக -

கேரள பாண்டிய ராஜகுமாரா சரணம் ஐயப்பா
நாரண சங்கரர் ம்கிழும் செல்வா சரணம் ஐயப்பா
ஆரமுதம் நீ பேரழகன் நீ ஆரியங்காவில்
வாழ்பவன் நீ.
- இதயம் என்றும் உனக்காக -

அபயம் தந்திட சபரிமலை உண்டு ஐயப்பா
ஆறுதல் கூறிட உன் அருள் உண்டு ஐயப்பா
வேதம் நான்கும் வினைகளும் ஓடும்
நாவும் பாடும் ஞானம் கூடும்.
- இதயம் என்றும் உனக்காக -

பண்ணமுதம் தந்தவனே சரணம் ஐயப்பா
கண்ணழகு கொண்டவனே சரணம் ஐயப்பா
விண்ணவரின் கண்மணியே சரணம் ஐயப்பா
எண்ண்மதில் வந்திடுவாய் சரணம் ஐயப்பா
- இதயம் என்றும் உனக்காக -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகாளும் ஐயன் ஐயப்பா

உலகாளும் ஐயன் ஐயப்பா என்மனக் கோயில் தெய்வம் நீயப்பா அருள் நிறைந்திட இருள் மறைந்திட கலை வளர்ந்திட நிலை உயர்ந்திட வளம் வளர்ந்திட நலம் விளங்கிட வினை அகன்றிட வழி பிறந்திட சபரிமலைக்கு செல்லுவோம் சந்நிதியில் கூடுவோம் சரணகோசம் பாடுவோம்.

- உலகாளும் ஐயன் ஐயப்பா -

அறியாமை இருள் நீங்க அறிவென்னும் சுடர் ஏந்தும் அணையாத அருள் ஜோதி நீயல்லவா தெரியாமல் நான் செய்த பிழை தன்னை மன்னித்து அன்போடு அருள் சிந்தும் தாய் அல்லவா இசையோடு உன் புகழை எடுத்துச்சொல்லவா.

(அருள் நிறைந்திட இருள் மறைந்திட)

- உலகாளும் ஐயன் ஐயப்பா -

நினையாத பொழுதில்லை நீயின்றி கதியில்லை மனதோடு மணிமாலை மணிகண்டனே திசையேகும் கிடையாது மொழி பேதம் கிடையாது பல கோடி மனம் பாடும் ஒரே மந்திரம் பந்தளத்து சாஸ்தாவின் திரு மந்திரம்.

(அருள் நிறைந்திட இருள் மறைந்திட)

- உலகாளும் ஐயன் ஐயப்பா -

திறக்கின்ற வழியோரம் திருமுகமே வரவேண்டும் ஒலிக்கின்ற சொல் எல்லாம் உன் நாமமே. மறையாத ஒளி நீயே மறை வேதப் பொருள் நீயே. மனம் நாடும் பரிகாரம் உன் பாதமே உனை நாளும் மறவாத மனம் போதுமே.

(அருள் நிறைந்திட இருள் மறைந்திட)

- உலகாளும் ஐயன் ஐயப்பா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருமுடியைச் சுமந்து வந்தோம்

இரு முடியைச் சுமந்து வந்தோம் இரக்கமில்லையா!
இறைவா உன் சோதனைக்கோர் அளவுமில்லையா!

இரு முடியைச் சுமந்து வந்தோம் இரக்கமில்லையா!
இறைவா உன் சோதனைக்கோர் அளவுமில்லையா!

அழுதையிலே குளித்து வந்தேன் அறியவில்லையா!
அருகே ஓர் கல்லெடுத்தே வைக்கவில்லையா!
கரிமலையில் ஏறிவந்தேன் கவனமில்லையா! அந்த
கருடன் என்னைக் கண்டதாகச் சொல்லவில்லையா!

இரு முடியைச் சுமந்து வந்தோம் இரக்கமில்லையா!
இறைவா உன் சோதனைக்கோர் அளவுமில்லையா!

பம்பையிலே குளித்து வந்தேன் பார்க்கவில்லையா!
பம்பா நதி போஜனமும் அருந்தவில்லையா!
பம்பையிலே விளக்கெடுத்தேன் காணவில்லையா!
பகவானே உனக்குக்கூட சாட்சி தேவையா!

இரு முடியைச் சுமந்து வந்தோம் இரக்கமில்லையா!
இறைவா உன் சோதனைக்கோர் அளவுமில்லையா!

பதினெட்டுப் படிகளேறி வரவுமில்லையா! நான்
படித்தேங்காய் உடைத்த சத்தம் கேட்கவில்லையா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிமரத்தை சுற்றிவந்தேன் காணவில்லையா!
கூடி நின்ற ஜனங்களைப் போய் கேட்டுப்பாரையா!

இரு முடியைச் சுமந்து வந்தோம் இரக்கமில்லையா!
இறைவா உன் சோதனைக்கோர் அளவுமில்லையா!

நெய்யபிஷேகம் செய்தேன் நினைவுமில்லையா! நான்
மெய்யுருகிப் பாடியதும் கேட்கவில்லையா!
ஐயா உன் சரணமென்றே கதறவில்லையா! நீ
விஸ்வமெல்லாம் காத்தருளும் ஜோதியல்லவா!

இரு முடியைச் சுமந்து வந்தோம் இரக்கமில்லையா!
இறைவா உன் சோதனைக்கோர் அளவுமில்லையா!

## வருவாயா? வருவாயா?

வருவாயா? வருவாயா? கன்னி பூஜைக்கு வருவாயா?
மலையாளும் பகவானே கன்னி பூஜைக்கு வருவாயா?

ஏழையின் வாசலில் - சரணம் பொன் ஐயப்பா
ஏற்றிய தீபத்தில் - சரணம் பொன் ஐயப்பா
ஜோதி வடிவாக - சரணம் பொன் ஐயப்பா
சொந்தப் பொருளாக - சரணம் பொன் ஐயப்பா

அரியின் கொழுந்தே! அரனார் விருந்தே!
வருவாயா? நீயும் வருவாயா?
வருவாரே? சுவாமி வருவாரே. (வருவாயா...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவாயா? வருவாயா? வன் புலி ஏறி வருவாயா?
வில்லாடும் தோள் அசைய வீரமணி கண்டன் வருவாயா?

எங்கள் குருசாமி - சரணம் பொன் ஐயப்பா
உனக்கு படைக்கின்ற - சரணம் பொன் ஐயப்பா
அன்னதானத்தை - சரணம் பொன் ஐயப்பா
உண்ண எழுந்தோடி - சரணம் பொன் ஐயப்பா

குழத்துப்புழையே குழந்தை வடிவே வருவாயா? நீயும்
வருவாயா? வருவாரே சுவாமி வருவாரே!

(வருவாயா...)

அறிவாயா? அறிவாயா? அழைத்த காரணம் அறிவாயா?
அரிசிவனார் திருமகனே அழைத்த காரணம் அறிவாயா?

அல்லும் பகலும் - சரணம் பொன் ஐயப்பா
ஹரிஹரசுதனார் - சரணம் பொன் ஐயப்பா
ஏங்கிடும் மனதுக்கு - சரணம் பொன் ஐயப்பா
ஆறுதல் பெறவே - சரணம் பொன் ஐயப்பா

அழுதா நதியே அசையா விளக்கே அழைத்தோமே இதை
அறிவாயா? அறிவாரே சுவாமி அறிவாரே.

(வருவாயா...)

தருவாயா? தருவாயா? தரிசனம் நீயும் தருவாயா?
சன்னதியில் இருப்பது போல் தங்கமயமாக வருவாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீல உடையோடு - சரணம் பொன் ஐயப்பா
சாமிகள் வடிவாகி - சரணம் பொன் ஐயப்பா
மஞ்சள் நிறத்தோடு - சரணம் பொன் ஐயப்பா
மாளிகை புரமாகி - சரணம் பொன் ஐயப்பா

பொன்னம்பலமே பேசா ஒளியே வருவாயா? தரிசனம் தருவாயா? வருவாரே தரிசனம் தருவாரே.

(வருவாயா...)

## முதற்படி வணக்கம்

பதினெட்டுப் படிகளில் ஏறி வருவேன் சாமி ஐயப்பா உன் புண்ணிய நாமம் சொன்னேன். சாமி ஐயப்பா சாமி ஐயப்பா பத்தியோடு உன்பாதம் நாளும் தொழுவேன் சாமி ஐயப்பா. நித்திய நிர்மலா நின் தரிசனம் சாமி ஐயப்பா.

முதற் படி வணக்கம் அரிகரப் புதல்வா - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா

இரண்டாம் படியே மணிகண்டபாலா - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா

மூன்றாம்படி முன்னேற்றி வைப்பாய் - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் படியே ஞானத்தின் ஒளியே - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா

ஐந்தாம் படியே பன்ரேதியலே - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா

ஆறாம் படியே தாரக ப்ரம்மமே - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா

ஏழாம் படியே ஏழைப்பங்காளா - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா

எட்டாம் படியே அஷ்டலக்சுமி மகனே - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா

ஒன்பதாம் படியே நரக்கிரக தலைவா - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா

பத்தாம் படியே பரமனின் குமரா - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா

பதினொராம் படியே முழுமதி நீயே - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டாம் படியே பாதம் கதியே - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா

பதின்மூன்றாம் படியே பந்தழ குமரா - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா

பதின்னான்காம் படியே சந்தன மாதா - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா

பதினைந்தாம் படியே ஸ்ரீ தர்மசாஸ்தா - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா

பதினாறாம் படியே பாவவினாசா - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா

பதினேழாம் படியே ஏறியே வந்தோம் - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா

பதினெட்டாம் படியே தாண்டியே வந்தோம் - சுவாமி ஐயப்பா
சுவாமி சரணம் ஐயப்பா.

சத்தியமான பதினெட்டுப் படியில் சஞ்சலம் நீக்கிடுவாய். சுவாமி ஐயப்பா நித்ய நிர்மலா நின்பதம் சரணம் சுவாமி ஐயப்பா. எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டவனே சுவாமி ஐயப்பா. எல்லோர் மனதிலும் நிறைந்திருப்பாய் சுவாமி ஐயப்பா - சுவாமியே சரணம் ஐயப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடுராஜா பிரபு நாகராஜா

ஆடுராஜா பிரபு நாகராஜா - எங்கள்
ஐயப்பன் பேரை சொல்லி ஆடுராஜா
பாடுராஜா பிரபு நாகராஜா - எங்கள்
ஐயப்பன் பேரை சொல்லி ஆடுராஜா.

சரண கோசம் போட்டுவரும் பக்தரை பாரு
சன்னிதியை நாடிவரும் கூட்டத்தை பாரு
ஐயப்பனை பாடும் கன்னிச் சாமியைப் பாரு
கருணையுடன் வழி விடுவார் நிச்சயம் பாரு.

காட்டினிலே கருணை வேண்டும் நாகராஜா
ஐயப்பனின் சாமிதானே சொல்லு ராஜா
அரிகரன் மேல் இருக்கும் எங்கள் நாகராஜா
இந்த சாமிகளை காக்க வேண்டும் சர்ப்ப ராஜா.

அழைக்கட்டுமா சாமி அழைக்கட்டுமா - அந்த
ஆனந்த ரூபனை நான் அழைக்கட்டுமா - அந்த
எருமேலி வாசனை நான் அழைக்கட்டுமா - அந்த
பம்பா வாசனை நான் அழைக்கட்டுமா - அந்த
ஆரியங்கா ஐயனை நான் அழைக்கட்டுமா - அந்த
எருமேலி சாஸ்தாவை நான் அழைக்கட்டுமா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி வா ஐயப்பா ஓடி வா சுவாமி - நீ
ஓடி வா ராஜா நீ ஓடி வா கண்ணா - நீ
ஓடி வா தேவா நீ ஓடி வா சுவாமி - அந்த
பம்பாநதி கடந்து ஓடி வா சுவாமி - அந்த
பதினெட்டாம் படி தாண்டி ஓடி வா சுவாமி
எங்கள்------? சாமி பஜனைக்கு ஓடி வா சுவாமி
இந்த பக்தர்கள் பஜனைக்கு ஓடி வா சுவாமி
இந்த பக்தர்கள் குறை தீர்க்க ஓடி வா சுவாமி.

## வழிநடை சரணம்

| | | |
|---|---|---|
| சாமியே | - | ஐயப்போ |
| ஐயப்போ | - | சாமியே |
| சாமி சரணம் | - | ஐயப்ப சரணம் |
| ஐயப்ப சரணம் | - | சாமி சரணம் |
| பள்ளிக்கட்டு | - | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | - | பள்ளிக்கட்டு |
| கல்லும் முள்ளும் | - | காலுக்கு மெத்தை |
| காலுக்கு மெத்தை | - | கல்லும் முள்ளும் |
| குன்றும் குழியும் | - | கண்ணுக்கு வெளிச்சம் |
| கண்ணுக்கு வெளிச்சம் | - | குன்றும் குழியும் |
| சாமியே | - | ஐயப்போ |
| ஐயப்போ | - | சாமியே |
| சாமியப்பா | - | ஐயப்பா |
| சரணமப்பா | - | ஐயப்பா |
| வரணுமப்பா | - | ஐயப்பா |
| வந்தோமப்பா | - | ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வாறோமப்பா | - | ஐயப்பா |
| பள்ளிக்கட்டு | - | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | - | பள்ளிக்கட்டு |
| இருமுடிகட்டி | - | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | - | இருமுடிகட்டி |
| யாரைக் காண | - | சாமியைக் காண |
| சாமியைக் கண்டால் | - | மோட்சம் கிட்டும் |
| எப்போ கிட்டும் | - | இப்போ கிட்டும் |
| இப்போ கிட்டும் | - | எப்போ கிட்டும் |
| சாமியே | - | ஐயப்போ |
| ஐயப்போ | - | சாமியே |
| தேகபலம் தா | - | பாதபலம் தா |
| பாதபலம் தா | - | தேகபலம் தா |
| ஏத்திவிடப்பா | - | தூக்கிவிடப்பா. |
| தூக்கிவிடப்பா | - | ஏத்திவிடப்பா |
| நெய் அபிஷேகம் | - | சாமிக்கே |
| சாமிக்கே | - | நெய் அபிஷேகம் |
| பால் அபிஷேகம் | - | சாமிக்கே |
| சாமிக்கே | - | பால் அபிஷேகம் |
| தேன் அபிஷேகம் | - | சாமிக்கே |
| சாமிக்கே | - | தேன் அபிஷேகம் |
| கற்பூரதீபம் | - | சாமிக்கே |
| சாமிக்கே | - | கற்பூரதீபம் |
| காணிப்பொண்ணும் | - | சாமிக்கே |
| சாமிக்கே | - | காணிப்பொண்ணும் |
| கருடன் வருவதும் | - | சாமிக்கே |
| சாமிக்கே | - | கருடன் வருவதும் |
| தேவனே | - | தேவியே |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேவியே | - | தேவனே |
| தேவன் பாதம் | - | தேவி பாதம் |
| தேவி பாதம் | - | தேவன் பாதம் |
| பகவானே | - | பகவதியே |
| பகவதியே | - | பகவானே |
| பகவான் சரணம் | - | பகவதி சரணம் |
| பகவதி சரணம் | - | பகவான் சரணம் |
| ஈஸ்வரனே | - | ஈஸ்வரியே |
| ஈஸ்வரியே | - | ஈஸ்வரனே |
| ஈஸ்வரன் சரணம் | - | ஈஸ்வரி சரணம் |
| சாமியே | - | ஐயப்போ |
| ஐயப்போ | - | சாமியே |
| மணிகண்டா | - | ஐயப்பா |

## சபரிமலையில் நடைசாத்தும் தாலாட்டுப் பாடல் (சாஸ்தா அஷ்டகம்)

ஹரிவராஸனம் விஸ்வ மோஹனம்
ஹரிததீஸ்வரம் ஆராத்ய பாதுகம்
அரிவிமர்த்தனம் நித்யநர்த்தனம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே
(சரணம் ஐயப்பா)

சரண கீர்த்தனம் சக்தமானஸம்
பரண லோபலும் நர்த்தநாலஸம்
அருணபாஸுரம் பூதநாலயஸம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே
(சரணம் ஐயப்பா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணரய சத்யாய பிராண நாயகம்
பிரணத கல்பகம் சுப்ரபாஞ்சிதம்
பிரணவ மந்திரம் கீர்த்தனப்ப்ரியம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே
(சரணம் ஐயப்பா)

துரக வாகனம் சுந்தரானனம்
வரகதாயுதம் வேதவர்ணிதம்
குரு குருபாகரம் கீர்த்தனப்ப்ரியம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே
(சரணம் ஐயப்பா)

திரிபுவனார்ச்சித்தம் தேவதாத்மகம்
திரிணயனப்பிரபும் திவ்யதேசிகம்
திரிச பூஜிதம் சிந்திதப்பரதம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே
(சரணம் ஐயப்பா)

பவபாயபஹம் பாவுகாவஹம்
புவன மோஹனம் பூதபூஷணம்
தவள வாகனம் திவ்ய வாஹணம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே
(சரணம் ஐயப்பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களமிருதுஸ்மிதம் சுந்தரானனம்
களா கோமளம் காத்ர மோஹனம்
களப கேசரி வாஜி வாஹனம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே
(சரணம் ஐயப்பா)

ச்ரிதஜனப்பிரியம் சிந்திதப்ரதம்
சுருதி விபூசனம் ஸாது ஜீவனம்
சுருதி மனோஹரம் கீதவாசகம்
ஹரிஹராத்மஜம் தேவமாச்ரயே
(சரணம் ஐயப்பா)

## தீப மங்களம்

தீப மங்கள ஜோதி நமோ நம
தூய சபரிகிரீசா நமோ நம
பூரண புஸ்களை நாதா நமோ நம
அருள் தாராய் நமோ நம.

### மங்களம்

சபரிமலை தன்னில் வாழும் சாஸ்தாவுக்கு மங்களம்
தவமுனிவர் போற்றும் அந்த சன்னிதிக்கு மங்களம்

இபமுகவன் முருகனுக்கு இளையனுக்கு மங்களம்
இன்பமெல்லாம் தந்தருளும் இறைவனுக்கு மங்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிமிசை பவனிவரும் புனிதனுக்கு மங்களம்
புலிமயங்கும் மோகினியாள் புதல்வனுக்கு மங்களம்

அன்புடனே அருள்புரியும் ஐயப்பனுக்கு மங்களம்
அழகேவுருவான எங்கள் மெய்யனுக்கு மங்களம்

வெற்றி தரும் வில்லெடுத்த வேந்தனுக்கு மங்களம்
வித்தகனாம் வீரமணி கண்டனுக்கு மங்களம்

பம்பை நதி சேருகின்ற பக்தருக்கு மங்களம்
பந்தளம் பேர் பாடுகின்ற அனைவருக்கும் மங்களம்

ஜெய மங்களம் நித்திய சுப மங்களம்
ஜெ மங்களம் நித்திய சுப மங்களம்.

## மங்களம் – 2

மணிகண்ட வாசகருக்கு மலையேறும் தாசருக்கும்
மாளிகை புரத்து மஞ்ச தேவியவர்க்கும்
பந்தளத்தை ஆண்டுவந்த பார்போற்றும் மன்னருக்கும்
மணிகண்ட கோபால கிருஷ்ணனுக்கும்
ஜெயமங்களம் நித்ய சுப மங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி சிவானந்தரின் இன்றியமையாத போதனைகள்

- காலை நான்கு மணிக்கு விழித்தெழு ஜபமும் தியானமும் செய்.
- ஜபம், தியானம் செய்வதற்கு சித்த ஆசனம் அல்லது பத்மாசனத்தில் உட்கார்.
- சாத்வீகமான உணவைப் புசி. வயிற்றை வரம்பின்றி நிரப்பாதே.
- சாதுக்கள், துறவிகள், ஏழைகள், நோயாளிகள், கஷ்டப்படுகிறவர்களுக்கு சேவை செய்.
- உன் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கைத் தருமஞ் செய்.
- தினந்தோறும் பகவற்கீதை ஓர் அத்தியாயம் படி.
- வீரியத்தை காப்பாற்று. தனியாக படுத்துறங்கு.
- ராஜஸ உணவு, மதுபானம், புகைப்பிடித்தல் ஆகியவற்றை விடு.
- ஏகாதசி அன்று உபவாசம் இரு. அல்லது பால், பழம் மட்டும் உட்கொள்.
- தினந்தோறும் இரண்டு மணிநேரம் மௌனத்தை கடைப்பிடி.
- உணவருந்தும் போது பேசாதே.
- எவ்விதத்திலும் உண்மையே பேசு. குறைவாகவும், இனிமையாகவும் பேசு.
- உன்னுடைய தேவைகளைக் குறைத்துக் கொள். திருப்தியாகவும், சந்தோஷமாகவும் வாழ்க்கை நடத்து.
- மற்றவர் உணர்ச்சிகளை எப்போதும் புண்படுத்தாதே. எல்லோரிடத்தலும் அன்பாக இரு.

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ், பலாலி வீதி, கோண்டாவில்.
T.P : 222 6722

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org